# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

## THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Summary Trial Case No. | : S.T.C.492/2020 |
| Deposition of Witness for Defence | : D.W. 1 |
| Name | : Abraham Mathew |
| Father Name | : P.I. Mathew(Late) |
| Village | : Parry Agro Industries limitted Magurange Post Office |
| Taluk | : ,Pandalur |
| Calling | : General Manager |
| Religion | : Christian |
| Caste | :-- |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2024

-

**<u>முதல் விசாரணை</u>-**

புகார்தாரர் ராகவன் என்பவரை தெரியும். வழக்கு காலத்தில் தொழிலாளர் உதவி ஆணையர்(தோட்டங்கள்)/ தோட்ட தொழிலாளர் ஆணையராக பணிபுரிந்து வந்தார். கன்னியாகுமரி தோட்டங்கள் சங்கம் என்று உள்ளது. அது பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். அதில் நியுஅம்பாடி எஸ்டேட் குலசேகரம் அதில் ஒரு உறுப்பினாரக உள்ளது. அதில் வேளிமலை எஸ்டேட்டும் உறுப்பினராக உள்ளது. அதனுடன் சேர்ந்து 14 எஸ்டேட்களும் உறுப்பினர்களாக உள்ளது. ராகவன் வழக்கு ஆய்வு செய்தது குறித்து ஜீப் இன்ஸ்பெக்டர் ஆப் பிளான்டேசன் அவர்களிடம் அசோசியேசன் சார்பாகவும் நியூஅம்பாடி சார்பாகவும் புகார் கொடுத்திருந்தோம். 05.03.2020 ம் தேதி

கன்னியாகுமரி டிஸ்டிக்ட் பிளான்டேசன் அசோசியேசன் நாகர்கோவில் சார்பாக புகார் கொடுத்திருந்தோம்.

அந்த புகார் சம்பந்தமாக 21.09.2020 ம் தேதி விசாரணை அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதன்பிறகு விசாரணை அதிகாரி அப்துல்காதர் அவர்கள் வந்து எஸ்டேட்டுக்கே வந்து ஒவ்வொரு இடத்தையும் ஆய்வு செய்து ஆவணங்களையும் சரிபார்த்தார். பழைய இன்ஸ்பெக்டர் ஆப் பிளான்டேசன் பதிவேடுகளையும் பார்வையிட்டார். அனைத்து சட்டப்படியான ஆவணங்களையும் சரிபார்த்தார். அதன்பிறகு வாதி ராகவன் அலுவலகத்திற்கு சென்றார். அங்கிருந்தும் ஆவணங்களை சேகரித்தார். நகார்கோவில் ஒருங்கிணைந்ததொழிலாளர் துறை அலுவலகத்திற்கும் வரச்சொன்னார்கள். நான் அங்கு சென்றேன். வாதி அலுவலகத்திற்கு அருகில் உள்ளது. நாங்கள் எங்களுடைய பழைய ஆவணங்களையும் அங்கு வைத்து சரிபார்க்கப்பட்டது. எங்களுக்கு அறிக்கை எதுவும் தரவில்லை. ஆனால் நாங்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலமாக அறிக்கைகளை கேட்டு பெற்றோம். அந்த அறிக்கைகளை நாங்கள் கொடுத்திருந்த புகாரின் அடிப்படையில் ராகவன் தொந்தரவு செய்தார் என்றும், சட்டப்படி அனைத்து ஆவணங்களையும் நாங்கள் பராமரித்து வந்தோம் என்பதையும் உறுதி செய்து அறிக்கையும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் பிளான்டேசன் லேபர் அக்டின் அடிப்படையிலும் அரசாங்கத்தால் ஏற்படுததப்பட்ட அரசாணையிலும் சுற்றறிக்கைகளிலும் மற்றும் அறிவிப்புகளிலும் எதிராக வாதி ராகவன் என்பவருடைய ஆய்வு அமைந்திருந்தது. என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அந்த அறிக்கையில் வெளிப்படைத்தன்மை எதுவும் இல்லாத காரணத்தினால் மேற்கண்ட சுற்றறிக்கைகளை பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஒவ்வொரு தோட்டத்திலும் ஆய்வுக்கு முன்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அதனை கண்டறிந்து எவ்வாறு சரிசெய்ய வேண்டும் என்று சொல்லிக்கொடுக்க வேண்டும் என்றும் அதன்பிறகு 15 நாட்கள் அவகாசம் அளித்து மீண்டும் அந்த குறைபாடுகளை சரிசெய்யாவிட்டால் வழக்கு தொடுக்காலாம் என்பதை அவர் பின்பற்றவில்லை.

அதனால் மேற்கண்ட முன்நடவடிக்கை எதுவும் பின்பற்றாததனால் இந்த வழக்கு

நிலைக்கதக்கதல்ல. தேசிய பண்டிகை விடுமுறை சட்டத்தின் படி எந்தெந்த நாட்கள் விடுமுறை கொடுக்கப்பட வேண்டும் என்று பட்டியல் தயாரித்து தொழிலாளர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர்கள் முறைப்படி அனுமதிக்கப்பட்டு திரும்பவும் எங்களிடம் கொடுப்பார்கள் என்றும் மேற்படி நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும் அதற்காகவும் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் பிளாங்கேட் மற்றும் அம்பர்லா ஆகியவற்றை தர நிர்ணயம் செய்ய கோரி அலுவலகத்திற்கு அனுப்பிய போதும் அவர்கள் உரிய காலத்திற்குள் தரநிர்ணயம் செய்து தருவதில்லை. நாங்கள் சென்ற வரும் தரநிர்ணயம் செய்ததை வைத்து விலை நிர்ணயிக்கும் போது எங்கள் மீது நாங்கள் தரநிர்ணயம் செய்யாததை எவ்வாறு தரநிர்ணயம் செய்தீர்கள் என்று வழக்கு தொடுத்து தொந்தரவு செய்து வந்தார்கள் என்றும், பிளான்டேசன் சட்டத்தின் படி நாங்கள் பதிவேடுகளை பராமரித்து வரும் போது பிற தொழிலாளர் நல சட்டங்களின் படி பதிவேடுகளை பராமரித்து வரவேண்டிய அவசியம் இல்லாத சூழ்நிலையிலும் அவர்களுக்கு நன்கு தெரிந்தும் எங்கள் மீது வழக்கு தொடுத்திருந்தார்கள். மேற்படி விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும்.

ஆவணங்களை குறியீடு செய்தவதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,

பத்மநாபபுரம்